# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
## PART I EXAMINATION IN COMMERCE/ BUSINESS ADMINISTRATION – 2000 /01 (REPEAT) (OCTOBER/ NOVEMBER 2001)

LIBRARY
25 FEB 2002
Eastern University, Sri Lanka

## BBA/ COM 204 Management Information Systems

நேரம் : 03 மணித்தியாலங்கள்

முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.

முதலாம் வினா 40 புள்ளிகளையும் ஏனைய வினாக்கள் ஒவ்வொன்றும் 15 புள்ளிகளைக் கொண்டுள்ளது.

---

01. உலக செயற்பாட்டை இணைக்க யுனிலிவர் முயற்சிக்கின்றது.

உலகின் மிகப்பெரிய பல்தேசியக் கம்பனிகளுள் ஒன்றான உலகளாவிய யுனிலிவர் கம்பனியில் சூரியன் மறைவதில்லை. பரந்த கூட்டுத்தொகுதிக் கம்பனி 1000 இற்கும் மேற்பட்ட பலதரப்பட்ட உற்பத்திகளைக் கொண்டிருக்கின்றது. 300,000 மேற்பட்ட தொழிலாளர்களும், 300 இற்கும் மேற்பட்ட செயற்பாட்டு பிரிவுகளும் 75 நாடுகளில் அமைந்திருக்கின்றன. இக்கம்பனி T.S. Lipton, Calvin Klein Cosmetics, Lever Brothers ஆகியவற்றை உள்ளடக்கின்றது. யுனிலிவரின் மிகப்பெரிய பிரதான வியாபாரம் உணவுப் பொருட்களாகும்.

1980 களிலிருந்து 100க்கு மேற்பட்ட வியாபாரங்களை வாங்கி அதன் இரண்டு மடங்கிற்கும் மேலாக விற்பனை செய்தது. எவ்வாறெனினும் செலவுடன் அக்கறை கொண்ட முகாமைத்துவம் போதியளவான காசு நிரம்பலையும் (யுனிலிவரின் வருடாந்த காசோட்டம் 3 மில்லியன் டொலருக்கும் மேலாகக் காணப்பட்டது) ஒப்பீட்டளவில் குறைந்த கடன் கிடைப்பனவையும் உறுதிப்படுத்தியிருந்தது.

1930 இல் டச் மாஜரின் கம்பனிக்கும், பிரிட்டிஸ் சோப் உற்பத்தியாளருக்கு மிடையேயான இணைப்பானது லண்டனில் சேர் மைக்கல் பெரியும், ரொற்றடாமில் மொறிஸ் ரபக்ஸ்பிளட்டினையும் சம அதிகாரம் கொண்ட இணைத் தலைவர்களாக யுனிலிவர் பேணியது. பெரியும் ரபக்ஸ்பிளட்டும் இன்றைய உலகளாவிய போட்டிச் சந்தையில் தமது பலம் பொருந்திய நிறுவனத்தை மிக சுறுசுறுப்பான நிறுவனமாக மாற்ற முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

யுனிலிவர் கம்பனியானது சோப், ஐஸ்கிறீம், சம்போ, மாஜரின், சோசஸ், போன்ற பொருட்களுக்கு பிரதான போட்டியாளர்களான Procter Gamble, Nestle, Colgate – Palmolive and Snapple ஆகிய நிறுவனங்களால் ஏற்படுத்தப்படுகின்ற போட்டியினை தொடர்ச்சியாக குறைத்து விடுகின்றது.

அபிவிருத்தியடைந்த சந்தைகளில் தேக்க நிலையேற்பட்டதனால், யுனிலிவர் தனது கவனத்தை ஆசியா, லத்தின் அமெரிக்கா, மற்றும் மத்திய ஐரோப்பிய நாடுகளில் குவித்தது. யுனிலிவர் நிறுவனத்தின் பலதரப்பட்ட பொருட்களை நான்கு பிரிவுகளாகப் பிரிப்பதில் பெரியும் ரபக்ஸ்பிளட்டும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவையாவன, உணவு, தனிப்பட்டவர்களுக்கான பொருட்கள், சவர்க்காரங்கள், விஷேட இரசாயனங்கள். உணவுப் பிரிவானது மாஜரின், ஐஸ்கிறீம், தேயிலை குடிபானங்கள், உணவுக் குழம்பு வகைகள் போன்றவற்றில் தனது கவனத்தை செலுத்திக் கொண்டிருக்கின்றது.

தனிப்பட்டவர்களுக்கான பொருட்கள் பிரிவானது அழகுசாதனங்கள், வாசனைப் பொருட்கள், கிறீம் வகைகள் ஆகியவற்றில் கவனத்தைக் குவித்து வருகின்றது. நிருவாகமானது ஒரு குறிப்பிட்ட நாட்டில் தனது உற்பத்தி இயந்திரங்களை நிறுவி அதன் உற்பத்திகளை வழங்குவதிலும் பார்க்க ஒரு கண்டத்திற்கு உற்பத்திகளை விநியோகிக்கக்கூடிய வகையில் உற்பத்தி இயந்திரங்களை நிறுவி நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிக்க விரும்புகின்றது. நிறுவனமானது அதிசிறந்த உற்பத்தியில் பொருட்களை மிகவும் குறுகிய காலத்தில் உலகளாவிய ரீதியில் உற்பத்தி செய்ய விரும்புகின்றது.

நிறுவனத்தில் உலகாளவிய ரீதியில் காணப்படும் பொருட்கள் (Brand) முகாமையாளர்களையும் நாட்டு (Country) முகாமையாளர்களையும் சமப்படுத்தும் நோக்கில் பெரியும் ரபக்ஸ்பிளட்டும் பொருட்களை உருவாக்குதல், சந்தைப்படுத்தலுக்கான தந்திரோபாயங்களை பிராந்திய ரீதியாக பிரித்துக் கொடுத்துள்ளார்கள். அதாவது தென்கிழக்காசியாவிற்கான சவர்க்கார வல்லுநராக தாய்லாந்தும் உற்பத்திகளை மேற்கொள்ளுபவராக பிலிப்பைன்சும் விளங்கும். ஐரோப்பாவில், பிராங்பட் அலுவலகம் தோல் பாதுகாப்பு பொருட்களை மேற்பார்வை செய்யும் அலுவலகமாகவும் பரிஸ் அலுவலகம் சம்பூ (Shampoo)க்களுக்கு பொறுப்பாகவுமிருக்கும். அதாவது ஒரு நாடு புதிய பொருட்களை உருவாக்கி அதனை அப்பிராந்தியத்தில் சந்தைப்படுத்தும் பொறுப்பையும் கொண்டிருக்கும். கடந்த காலத்தில் யுனிலிவரானது பூகோள ரீதியான பரவலாக்கலைக் கடைப்பிடித்தது. நிறுவனமானது மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டை பேணும் வேளையில் நாட்டு முகாமையாளர்களுக்கு வெவ்வேறு நாடுகளின் சுதேசிய தேவைகளை ஈடுசெய்யும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளது.

நிறுவனமானது அதனது முகாமையாளர்களை தேசிய எல்லைகளைக் கடந்தும் ஒரு பொதுவான நிறுவனக் கலாச்சாரத்தைப் பின்பற்ற வேண்டுமென தூதுவர்களைத் தயார்படுத்துகின்றது. முகாமையாளர்கள் நிறுவனத்தின், லண்டனுக்கருகிலுள்ள சர்வதேச முகாமைத்துவ பயிற்சிக் கல்லூரியில் பயிற்றப்பட்டு வெவ்வேறு நாடுகளில் காணப்படும் நிறுவனத்தின் கிளைகளில் பல்வேறுபட்ட நிலைகளை தொழில் புரிய அனுமதிக்கப்படுகின்றார்கள்.

கூடுதலான கம்பனிகள் ஒரு ஆணிவேரில் இருப்பதால் நிறுவனத்தின் சிரேஸ்ட முகாமையானது யுனிலிவரினது தொழில்நுட்பத்தில் மூழ்கிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. யுனிலிவரில் காணப்படும் கூடுதலான தொழில்நுட்பங்கள் பாவனைக்கு ஒவ்வாததாகவும் குறைவாக ஏற்றுக்கொள்ளப்பட்டும் குறைவாக நடைமுறைப்படுத்தப்பட்டும் காணப்படுகின்றன. நிறுவனமானது அங்கு பரந்துபட்டுக் காணப்படும் வெவ்வேறு விதமான வன், மென் பொருட்களை ஒரு பொதுவான கட்டமைப்பில் கொண்டு வந்து அதனை உலகளாவிய வலைப்பின்னலில் இணைந்து அதனை உலகளாவிய வலைப்பின்னலில் பாவிக்க எண்ணியது. இதற்காக மைக்கல் ஜோன்சனை நிறுவனம் வேலைக்கு அமர்த்தியது.

யுனிலிவர் நிறுவனத்தின் தகவல் முறைமை சார்ந்த பழைய அணுகுமுறையினால் அதனிடம் பல்வேறுபட்ட வித்தியாசமான வன், மென் பொருட்கள் காணப்படுகின்றன. நிறுவனத்தின் கொள்கையான, IBM, Hewlett – Packard அல்லது DEC நிறுவனங்களின் வன்பொருட்களை மாத்திரமே பாவிப்பது கடைப்பிடிக்கப்பட்டாலும் அங்கு நிறைய வன் பொருட்களிடையே ஒவ்வாமை பிரச்சினை முறைமைகள் ஒரு கட்டுப்பாட்டில் இல்லாமல் காளான்கள் போல் முளைத்த வண்ணம் உள்ளன. மைக்கல் ஜோன்சன் தனது திட்டம் நிறைவேறும் படியாக இம்மூன்று வன் பொருள் விற்பனையாளர்களையும் ஒரு பொதுவான மென் பொருள் கட்டமைப்பைப் பாவிக்கும் வண்ணமான வன் பொருட்களை தரும்படி கேட்டுக் கொண்டார். நோமன் வீய்சர் இன் கருத்துப்படி உலகளாவிய ரீதியில் தொழிற்படும் ஒரு நிறுவனத்திற்கான சவாலானது உள்நாட்டு பிரிவுகளை கூட்டிய வினைத்திறனோடு இயங்க வைப்பதோடு அவை நாடுகளுக்கிடையே மாற்றமடையாததாகவும் ஒரு பொதுவான அமைப்பிற்கும் உட்பட்டதாக அமைதலாகும்.

LIBRARY
FEB 2002
Eastern University, Sri L

யுனிலிவர் நிறுவனம்மானது இவ்விலக்கை பரந்துபட்டுக் காணப்படும் உற்பத்தி நிறுவனங்களின் வியாபார நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத வண்ணம் அவைகளிற்கு ஒரு பொதுவான அடித்தளமிடுவதாகும்.

ஜூன் 1990 இல் ஜோன்ஸன் பிரயோகக் கட்டுக்களை வெவ்வேறு வன் பொருட்களில் பாவிப்பது பற்றி தனது கவனத்தை செலுத்தினார். இதனடிப்படையில் அவர் யுனிலிவர் நிறுவனத்தின் மூன்று வன் பொருட்கள் வழங்குநர்களிடம் தான் ஒரு பிரயோகக்கட்டை உருவாக்கவிருப்பதாகவும் அதனை உலகில் எந்த இடத்திலுமுள்ள கணணியில் பத்து நாட்களில் நிறுவக்கூடியதாக இருக்க வேண்டுமெனவும் கூறினார். அவர் முக்கியமாக போட்டித்தன்மை கூடிய பிரயோகக்கட்டுக்களை ஒரு இடத்தில் உருவாக்கி அதனை யுனிலிவர் நிறுவனத்தின் ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்பி அதனை அங்கு உடனடியாக நிறுவுவதன் மூலம் அதனைப் பெறுபவர்கள் தாங்களாகவே அதனை உருவாக்கியது என்பதைப் போன்ற ஒரு எண்ணத்தையடைய வேண்டுமென விரும்பினார்.

ஜோன்ஸன், யுனிலிவர் நிறுவனத்திற்கு வன், மென் பொருட்களை வழங்குபவர் களிடமிருந்து, நிறுவனத்தின் உலகளாவிய வலையமைப்பிற்கான அத்திவாரமான ஒரு பொதுவான மென் பொருள் கட்டமைப்பை வழங்குவது பற்றியொரு உறுதிமொழியைப் பெற்றுக்கொண்டார். யுனிலிவரானது Open Software Foundation நிறுவனத்தின் AES (Application Environment Specification) இல் காணப்படும் நிமயத் தொகுதிகளை அதன் முறைமை, மென் பொருட்கள் தயாரிப்பிற்குத் தெரிந்து கொண்டது. AES ஆனது பாரிய நியமத் தொகுதிகளை உள்ளடக்கியதாகும். அவற்றுள் சில OSF/1 செயற்பாட்டு முறைமை, Motif படங்களுடனான பாவனையாளர் இடைவெட்டு, OSF இன் பரந்த கணணிச் சூழல், SQL, Posix (செயற்பாட்டு முறைமைக்கும் பிரயோகக் கட்டிற்குமிடையேயான மாதிரி இடைமூலம்) ஆகியவையாகும்.

ஜோன்ஸன், இந்த அடிப்படைச் சூழலுடன் வேறு முக்கியமான மென் பொருட்களையும் தரவுத்தள நியமங்களையும் சேர்த்துக் கொண்டார். யுனிலிவரானது Oracle, Sybase இன் தரவுத்தள முகாமை முறைமை, Lotus 123 இன் விரிதாள் மென் பொருள், சொல் நிரற்படுத்தும் மென்பொருள் (Word Perfect) ஆகியவற்றையும் தெரிந்து கொண்டது. Oracle நிறுவனத்தின் SQL படிவங்கள், Unity நிறுவனத்தின் Uniface பிரயோகச் சூழல் ஆகியன யுனிலிவரினால் முகப்பு மென்பொருள் உருவாக்கலுக்கான நியமங்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டன.

ஜோன்சனும் அவரது குழுவும் AES இன் Distributed Client/ Server தொழில்நுட்ப வசதியை யுனிலிவரின் உலகளாவிய வலையமைப்பிற்கான அத்திவாரமாகப் பாவிக்கத் தீர்மானித்தனர். Sprint International நிறுவனத்தை ஐரோப்பிய தரவு வலையமைப்பிற்காக தெரிவு செய்தனர். இறுதியாக யுனிலிவர் தனது மென் பொருட்களும் உலகளாவிய வலையமைப்பும் உலகளாவிய ரீதியில் காணப்படும் அதனை வேலைத்திட்டங்களை முகாமை செய்வதற்கு உதவுமென நம்புகின்றது. பெரியும் ரபக்ஸ்பிளட்டும் நவீன e-mail மென் பொருளின் உதவியுடன் யுனிலிவரின் புதிய செயற்பாட்டுத் தொகுதிகளை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

யுனிலிவர் நிறுவனமானது அதன் திறந்த முறைமை கொள்கையினால் அதனது சுதேசிய தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் பாதிக்கப்படமாட்டாது என நம்புகின்றது. உதாரணமாக Quest International, யுனிலிவர் நிறுவனத்தின் இங்கிலாந்து, நெதர்லாந்து, போன்ற நாடுகளிலுள்ள உணவு, வாசனைப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனமானது AES இன் நியமங்களைப் பாவித்து முக்கியமான பிரயோகக் கட்டுக்களை உருவாக்குகின்றது. Quest மிகவும் சிறிய நிறுவனம், (1991 இற்கான வருமானம் $ 842 மில்லியன்) மிகவும் விரைவாக ஒரு புதிய நியமத்திற்கு போகக் கூடியதாகவுள்ளது.

LIBRARY
FEB 2002
Eastern University

ஜோன்ஸன் நியமங்கள், திறந்த முறைமைகள் பற்றி உறுதியாக இருந்த போதும், அவர் கம்பனியின் செயற்பாடுகளிற்கு பங்கம் ஏற்படாதவண்ணம் இப் புதியவற்றை நடைமுறைப்படுத்த விரும்பினார். யுனிலிவர் நிறுவனத்தின் சகல செயற்பாடுகளையும் ஒரு திறந்த முறைமையிற்கு ஒரு நாளில் கொண்டுவர முடியாது என அவர் கருதினார். யுனிலிவரில் பரம்பரையாகக் காணப்படும் நூற்றுக்கணக்கான உரிமைச் சொத்திற்கான விண்ணப்பங்களை தனது ஊழியர்கள் அவற்றை எவ்வாறு கணணியில் சேமிக்கலாம் எனக் கண்டறியும்வரை அவற்றை அவையிருக்கும் இடத்திலே விட்டுவிட்டார். அதேவேளையில் யுனிலிவரின் புதிய பாரிய – திறந்த முறைமை அவர்கள் ஏற்கனவே பாவிக்கும் IBM AS/400 கணணிச் சூழலிலும் உடனடியாக மாற்றத்தை ஏற்படுத்த முனையவில்லை. இவற்றை உடனடியாக மூடிவிடுவது மிகவும் செலவு கூடிய விடயமாகும். ஜோன்ஸன், AS/400 கணணிகளைப் பாவிக்கும் நிறுவனங்கள் புதிய முறைமையிற்கு மாறும் காலத்தைத் தள்ளிப் போட்டாலும் அவர்கள் புதிதாக வாங்கும் அல்லது உருவாக்கும் மென் பொருட்கள் நிச்சயமாக RISC கணணிகளில் பாவிக்கப்படக்கூடியதாக இருக்க வேண்டுமெனக் கூறினார். ஏனெனில் இவை AES நியமங்களுடன் ஒத்துப் போகக்கூடியவை.

01. யுனிலிவரின் பிரச்சினைகளை போட்டிவிசை மாதிரியையும் Value Chain மாதிரியையும் பாவித்து ஆராய்க.

02. யுனிலிவரில் காணப்படும் பிரச்சினைகள் எவை?

யுனிலிவரின் நிறுவனங்களை ஒன்றாக இணைக்கும் பிரச்சினை எவ்வாறு முக்கியமானது? இப்பிரச்சினைக்கான முகாமை, தொழில்நுட்ப, நிறுவன காரணிகள் எவை?

03. யுனிலிவரின் நிறுவனங்களை இணைக்கும் பிரச்ச்சினைக்கான தந்திரோபாயத்தின் தன்மைகள் எப்படியானது? நீர் இத்தந்திரோபாயத்திற்கு உடன்படுகின்றீரா?

04. யுனிலிவர் போன்றதொரு நிறுவனத்தில் நிறுவனங்களை இணைக்கும் முறையானது எவ்வாறு அமைதல் வேண்டும்? யுனிலிவரிற்கு ஐந்து வருடகால முறைமைத் திட்டமொன்றை அது ஆகக் கூடிய இணைப்பை நிறுவனங்களிடையே உருவாக்கும் வண்ணம் பெறுவதற்காகத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குவீரா? அவ்வாறாயின் உமது திட்டத்தை விபரிக்குக.

02. i. ஒரு தகவல் முறைமையின் நிறுவன, முகாமைத்துவ, தொழில்நுட்ப பரிமாணங்கள் யாவை?

ii. MIS இன் இயல்புகள் யாவை? MIS ஆனது TPS இலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது? இது DSS இலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

iii. நிறுவனமொன்றுக்கும் அதன் தகவல் முறைமைகளுக்கும் இடையேயான தொடர்பு யாது? இத்தொடர்பானது காலத்துக்கேற்ப எவ்வாறு வேறுபடுகின்றது.

03. i. தந்திரோபாயத் தகவல்முறை என்றால் என்ன?

ii. தந்திரோபாய முறைமைகளுக்கான வாய்ப்புக்களை அடையாளம் காண்பதில் பெறுமதி தொடர் மாதிரிக (Value chain models) ளையும், போட்டித்தன்மை காரணிகளையும் (Competitive forces) வரையறுத்து ஒப்பீடு செய்க.

iii. அடிப்படையான நான்கு போட்டித்தந்திரோபாயங்களும் யாவை? இவ் ஒவ்வொரு போட்டித் தந்திரோபாயங்களையும் முன்னெடுப்பதற்கு நிறுவனங்களுக்கு தகவல் முறைகள் எவ்வாறு உதவ முடியும்?

25 FEB 20
Eastern University,

04\. i. சாத்தியப்பாடு (Feasibility) என்றால் என்ன? தகவல் முறைமைகளுக்கான மூன்று பிரதான சாத்தியப்பாட்டு பகுதிகள் ஒவ்வொன்றினையும் பெயரிட்டு விபரிக்குக.

ii. தகவல் தேவைப்பாடுகள் யாவை? அவற்றினைச் சரியாக தீர்மானித்துக் கொள்வதில் கடினத்தன்மை ஏற்படுவது ஏன்?

iii. மாற்றீடு (Conversion) என்றால் என்ன? விபரமான மாற்றீட்டுத் திட்டத்தினை (Conversion plan) வைத்துக்கொள்வது எத்துணை முக்கியமானது?

05\. i. கட்டமைப்பான (Structural), கட்டமைப்பற்ற (Un structural) தீர்மானங்களை வரைவிலக்கணப்படுத்துக. ஒவ்வொன்றுக்கும் மூன்று உதாரணங்கள் தருக.

ii. சரியான தீர்மானங்களை மேற்கொள்வதில் தகவல்கள் முறைமைகள் முகாமைத்துவத்திற்கு எவ்வாறு உதவுகின்றன.

iii. அழிவுகள், மோசடிகள், தவறுகள், துஸ்பிரயோகங்கள் ஆகியவற்றுக்கு மனித செயற்பாட்டு முறைமைகளை (Manual systems) விட கணணி முறைமைகள் (Computer systems) மிகவும் பலவீனமானதாகக் காணப்படுவது ஏன்?

06\. i. வியாபார செய்முறை மீளமைத்தல் (BPR) என்றால் என்ன?

ii. வியாபார செய்முறை மீளமைத்தல் தன்னியக்கமாக்கல், நடைமுறை விளக்குதல் ஆகியவற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது.

iii. வியாபார செய்முறை மீளமைத்தலுக்கு பரிந்துரைக்கப்படுகின்ற ஐந்து படிமுறைகளை வரிசைப்படுத்தி விளக்குக.

07\. i. இணையம் (Internet) என்றால் என்ன? அதன் பிரதான தொழிற்பாடுகள் யாவை?

ii. இணையத்தில் பயன்படுத்தப்படுகின்ற குறைந்தது நான்கு அடிப்படை கருவிகளை விபரிக்குக.

08\. i. தகவல் முறைமைகளை மீள அச்சுப்படுத்தல் (Information systems prototyping) என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

ii. இறுதிப் பயன்படுத்துவோர் அபிவிருத்திகளின் அனுகூல, பிரதிகூலங்கள் யாவை?

iii. கட்டுக்களை பாவனையாளருக்கு தகுந்தவிதத்தில் மாற்றுதல் (Package customisation) என்றால் என்ன? எவ்வாறான சந்தர்ப்பங்களில் இச்செயற்பாடானது பிரயோக மென்பொருள் கட்டுக்களை நிறுவும் போது ஒரு பிரச்சினையாக அமையலாம்.